www.kalvi.lk

SCHOLARSHIP MODEL EXAM

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை

(NEW SYLLABUS – 2020) தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

மாணவர் பெயர் :

பாடசாலை பெயர் :

Teacher :
A.R. MOHAMED AJEETH
(National Dip.in.primary.Teach.BEd®)

வினாத்தாள் - I

01 மணித்தியாலம்

புள்ளிகள் 200

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ஐந்தாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
☐ x $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள்	
எழுத்தில்	


	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரிட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப விடத்தாள் மதிப்பிடப்பட்டள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.	..... ஒப்பம்
மேற்பார்வையாளர் உறுதிப்படுத்துகிறேன்.	..... ஒப்பம்



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk


www.lkedu.lk

❖ 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1) .




1. 

2. 

3. 

2) .



1. 

2. 

3. 

❖ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

3) 1. 

2. 

3. 

4) 1. 

2. 

3. 

5) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வளைகோடுகள் மாத்திரம் உள்ள உருவைத் தெரிவு செய்க.

1. 

2. 

3. 

6) கீழே தரப்பட்டுள்ள எண்களுக்கும் அவற்றைச் சுற்றி வரையப்பட்டுள்ள உருக்களுக்கும் ஏற்ப அடுத்து வரும் உரு யாது?



.....

1. 


2. 

3. 

A.R.M AZEETH

www.lkedu.lk

❖ ஓர் உணவுப் பொருளில் சுற்றப்பட்டுள்ள பொதித்தாளில் உள்ள சுட்டித்துண்டில் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.



7) சுட்டித்துண்டுக்கேற்ப 1, 3, 2, 4 ஆகியனவாக இருக்கத்தக்கவை முறையே

1. உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, இலங்கை தர நிர்ணயம், சர்வதேச தரநிர்ணயம்
2. உற்பத்தித் திகதி, இலங்கை தர நிர்ணயம், காலாவதியாகும் திகதி , சர்வதேச தரநிர்ணயம்
3. உற்பத்தித் திகதி, சர்வதேச தரநிர்ணயம், காலாவதித்திகதி, இலங்கை தரநிர்ணயம்

❖ 2019 ஆம் ஆண்டு ஒரு பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் சந்தை விற்பனை கூடங்களின் மாதிரிப் படம் கீழே தரப்பட்டள்ளது. அதனைக் கொண்டு 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறுவர் சந்தை				
A உலர் உணவுப் பொருட்கள்	B மரக்கறி	C விளையாட்டுப் பொருட்கள்	D பழங்கள் , கீரை வகை	E பூங்கன்று

8) பருப்பு, வல்லாரை, பொம்மை, கத்தரிக்காய் ஆகியவற்றை வாங்குவதற்குரிய விற்பனைக் கூடங்களின் எழுத்துக்கள் முறையே யாது?

1. ADCB 2. ADBC 3. ABCD

9) தராசு பயன்படுத்தாத விற்பனைக்கூடங்களாக இருக்கக்கூடியவை எவை?

1. ED 2. CD 3. CE

10) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக கருத்தை தரும் வாக்கியத்தை தெரிவு செய்க?

1. பறவைகள் கூட்டமாக இரை தேடிச்சென்றது.
2. மாணவர்கள் மைதானத்தில் கரப்பந்து விளையாடினர்.
3. ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

11) மக்கள் : கூட்டம் என்பது போல ஆடு : .....

1. பட்டி 2. மந்தை 3. கூட்டம்

❖ கீழே தரப்பட்டுள்ள பந்தியை நன்றாக வாசிக்க.

நான் நன்றாக [A] அடுத்த மாதம் கல்விச்சுற்றுலா செல்ல உள்ளேன். அதற்கு பெற்றோரின் அனுமதிக் [B] கொண்டு [C] கூறியுள்ளார். அனுமதிக் கடிதத்தை எழுதி விரைவாக எனக்கு அனுப்பி வையுங்கள்.

12) பந்தியில் A, B, C ஆகிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே?

1. படிக்கிறோம், கடிதத்தைக், வகுப்பாசிரியர்
2. படிக்கிறேன், கடிதம், வகுப்பாசிரியர்
3. படிக்கிறேன், கடிதத்தைக், வகுப்பாசிரியர்


A.R.M. AJEETH

www.lkedu.lk

13) 1972 ஆம் ஆண்டு எமது நாடு குடியரசானது. இவ்வாண்டினை நூற்றாண்டிலும் தசாப்தத்திலும் கூறும் சரியான விடை யாது?

1. 20 ஆம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தம்
2. 19 ஆம் நூற்றாண்டின் 8 ஆம் தசாப்தம்
3. 20 ஆம் நூற்றாண்டின் 8 ஆம் தசாப்தம்

❖ கீழே தரப்பட்டுள்ள உருவைக் கருத்திற்கொண்டு 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



14) B, I ஆகிய எழுத்துக்களினால் வகைகுறிக்கப்படத்தக்க இரு விலங்குகள் முறையே?

1. முயல், காகம்
2. மான், கழுகு
3. யானை, கிளி

15) மேலே உள்ள உருவில் சிறுத்தை, கோழி ஆகியவற்றை வகை குறிப்பதற்கு முறையே பயன்படுத்தத்தக்க எழுத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?

1. F, B
2. F, D
3. J, I

16) 2005.03.15 ஆம் திகதி கோகுலன் இத்தாலியில் பிறந்தான். கோகுலன் 2015.04.23 ஆம் திகதி இலங்கைக்கு வந்தான். எனின் கோகுலன் எத்தனை வயதில், எத்தனையாம் மாதம், எத்தனையாம் நாளில் இலங்கைக்கு வந்தார்?

1. 10 வயது, 01 மாதம், 03 நாள்
2. 10 வயது, 01 மாதம், 08 நாள்
3. 10 வயது, 01 மாதம், 13 நாள்

17) ஒரு குறித்த விழாவில் சம அளவுடைய 05 மெழுகுவர்த்திகள் கொழுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டு முதலாவது மெழுகுவர்த்தி மு.ப 10.00 ற்கு கொழுத்தப்பட்டது. 10 நிமிடங்களுக்கு பின் இரண்டாவது மெழுகுவர்த்தி கொழுத்தப்பட்டு 10 நிமிடங்களுக்கு பின் மூன்றாவது மெழுகுவர்த்தி கொழுத்தப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு மெழுகுவர்த்தியும் 10 நிமிடங்கள் வித்தியாசத்தில் கொழுத்தப்பட்டன. ஒரு மெழுகுவர்த்தி 30 நிமிடங்கள் எரியும் எனின் ஐந்தாவது மெழுகுவர்த்தி எரிந்து முடியும் நேரம் யாது?

1. ந.ப 12.30
2. மு.ப 11.30
3. மு.ப 11.10

18) கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்குச்சட்டம் கிழக்கு மாகாணத்தில் மார்ச் 23 ஆம் திகதி திங்கட் கிழமை தொடங்கி 09 நாட்கள் அமுலில் இருக்குமென பொலிஸ் ஊடகப்பிரிவு கூறியது. எனின் மக்கள் தமது அத்தியவசிய பொருட்களை நுகர்வதற்காக எத்தனையாம் திகதி எந்த நாள் செல்ல முடியும்.

1. மார்ச் 31 செவ்வாய் கிழமை
2. ஏப்ரல் 01 செவ்வாய் கிழமை
3. ஏப்ரல் 01 புதன் கிழமை

A.R.M. AJEETH

www.lkedu.lk

❖ 19, 20 அகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கு அடுத்து வர வேண்டிய உருவை தெரிவு செய்க.

19) 

.....

1. 
2. 
3. 

20) 

.....

1. 
2. 
3. 

21) ஒரு பேருந்து தரிப்பிடத்தில் கார்களும், முச்சக்கர வண்டிகளுமாக மொத்தம் 17 வாகனங்கள் உள்ளன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 60 எனின், முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 9 3. 10


22) "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" எனும் பழமொழியின் கருத்து யாது?

1. திருப்தியுள்ள மனம்
2. திருப்தியற்ற மனம்
3. மனமுண்டானால் இடமுண்டு.

23) பாடசாலைக்கும் கோயிலுக்கும் இடையில் என்வீடு உள்ளது. கோயில், பாடசாலைக்கும் வங்கிக்கும் இடையில் உள்ளது. எனின், இத்தகவல் குறித்த சரியான கூற்று யாது?

1. கோயில் என்வீட்டுக்கும் வங்கிக்கும் இடையில் உள்ளது.
2. என்வீடு பாடசாலைக்கும் வங்கிக்கும் இடையில் உள்ளது.
3. பாடசாலை என்வீட்டுக்கும் வங்கிக்கும் இடையில் உள்ளது.

24) A, B, C, D, E என்னும் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மிகப்பெரிய இலக்கத்தை பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது?



1. 56798
2. 23456
3. 56789

25) இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


1. 10 2. 11 3. 12



AMA AIETI

www.lkedu.lk

26)







1. 24 2. 25 3. 36

27) 401 தொடக்கம் 405 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4, 0 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 6, 5 2. 5, 6 3. 6, 4


❖ சதுர வடிவம் உள்ள ஒரு தாள் முறையே X, Y எனும் உருக்களிலுள்ள முறிந்த கோடுகள் வழியே அம்புக்குறிகள் காட்டும் திசை வழியே மூன்று தடவைகள் மடிக்கப்படுகின்றன. மூன்றாவதாக மடிக்கப்பட்ட தாளில் Z இல் காட்டப்பட்டுள்ளவாறு இரு வட்டங்களும் ஒரு முக்கோணியும் வெட்டி நீக்கப்படுகின்றன.



X



Y



Z

28) தாளை முற்றாக விரிக்கும் போது கிடைக்கும் விடை யாது?

1. 

2. 

3. 

❖ கீழே தரப்பட்டுள்ள அறிவித்தல் பலகையைக் கொண்டு 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

A.R.M மருத்துவ நிலையம்

ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த வாரத்தின் ஒவ்வொரு நாளும்

09.00 தொடக்கம் **13.00**

14.00 தொடக்கம் **17.30** வரை

29) மருத்துவர் ஒருவர் நோயாளிக்கு ஒரு வாரத்திற்கு சிகிச்சை அளிப்பதற்கு எதிர்பார்க்கும் மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 42 மணித்தியாலங்கள்
2. 45 மணித்தியாலங்கள்
3. 45 மணித்தியாலங்களும் 30 நிமிடமும்

A.R.M.AJEETH

www.lkedu.lk

30) அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பின்வரும் கூற்றுக்களில் சரியானது?

1. மருத்துவர் தொற்று நோய்களுக்கு மாத்திரம் சிகிச்சையளிக்கின்றார்.
2. மருத்துவர் மருந்துப்பொருளாக பெரும்பாலும் தாவரப்பொருட்களை பயன்படுத்துவார்.
3. நோயாளிகள் குறித்த நேரத்திற்குள் சிகிச்சை பெறலாம்.

31) ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 12 ஆசனங்களும் ஐந்து பேர் அமரத்தக்க 3ஆசனங்களும் உள்ளன. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க மிகவும் கூடிய பயணிகள் எண்ணிக்கை யாது?

1. 42 2. 40 3. 38

32) 01 தொடக்கம் 20 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையும் 01 தொடக்கம் 20 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகையும் முறையே யாது?

1. 100, 118 2. 100, 110 3. 99, 110

33) தரப்பட்டுள்ள படங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன இப்படங்களை ஒழுங்கு முறையில் ஒழுங்கு படுத்தும் போது வரும் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.



A B C D E

1. BEDAC 2. BECDA 3. BEDCA



34) 06 பிள்ளைகளுக்கும் 04 வயது வந்தவர்களுக்கும் பால், தேநீர் வழங்குவதற்கு 1500 மில்லி லீற்றர் பால் தேவைப்பட்டது. 21 பிள்ளைகளுக்கும் 14 வயது வந்தவர்களுக்கும் பால், தேநீர் வழங்குவதற்கு எத்தனை லீற்றர் பால் தேவை?

1. 5000 மில்லி லீற்றர் 2. 5250 மில்லி லிற்றர் 3. 5750 மில்லி லீற்றர்

35) நீளம், அகலம், உயரம் 6 cm உள்ள ஒர் மரச்சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகிய 2 cm வீதம் எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?


1. 27 2. 18 3. 09

36) தரப்பட்டுள்ள கட்டங்களில் முகம்பார்க்கும் கண்ணாடியில் மாற்றம் இன்றித் தெரியும் உருக்களை மட்டும் கொண்ட கட்டத்தை தெரிவு செய்க.

1. 
2. 
3. 

37) இத்திண்ம உரு தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. இவ்வுருவின் உச்சிகள் சதுரமுகியின் உச்சிகளை விட குறைவானது.
2. ஒரே அளவான தள வடிவங்களை வைத்து உருவாக்கப்பட்டது
3. சதுரக்கூம்பகமும் இத்திண்ம உருவும் ஒத்த இயல்பு உடையவை



A.R.M. AJEETH

www.lkedu.lk

38) இவ்வுரு முகம்பார்க்கும் கண்ணாடி ஒன்றின் மூலம் தெரியும் கடிகாரம் ஒன்றைக் காட்டுகின்றது. அதன்படி இக் கடிகாரம் காட்டும் உண்மையான நேரம் யாது?




1. 8.00 மணி
2. 7.00 மணி
3. 9.00 மணி

39) ஒரு சோறு சமைப்பான் வாங்குவதற்கு ரேவதிக்கு ரூபா. 6300 தேவைப்பட்டது. ரேவதியிடம் ரூபா. 3000 இருந்தது. மீதியை 3 நண்பிகளிடமிருந்து அவள் பெற்றுக் கொண்டாள். பெற்றுக்கொண்ட பணம் பற்றி சரியான விடை?

1. ரூபா. 1800, ரூபா. 600, ரூபா. 900
2. ரூபா. 1800, ரூபா. 900, ரூபா. 900
3. ரூபா. 600 , ரூபா.1650, ரூபா. 1350

40) இவ்வுருவினை முறிந்த கோடுகள் வழியே வெட்டி பெறப்பட்ட சிறிய சதுரமுகி ஒன்றுக்கு வர்ணம் பூசுவதற்கு 275 ml தீந்தை தேவைப்பட்டது. எனின் பெறப்பட்ட எல்லா சிறிய சதரமுகிகளுக்கும் தேவைப்படும் மொத்த தீந்தையின் அளவு யாது?



1. 1l 100ml
2. 2l 200ml
3. 1l 925ml

...ලෙස්සයි...

A.R.M. ASEETH

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

SCHOLARSHIP MODEL EXAM

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை

(NEW SYLLABUS – 2020) தரம் 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

மாணவர் பெயர் :

பாடசாலை பெயர் :

Teacher :
A.R. MOHAMED AJEETH
(National Dip.in.primary.Teach.BEd®)

வினாத்தாள் - II

01 மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ஐந்தாம் பக்கத்தில் குறித்த இடத்தில், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரிட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப விடத்தாள் மதிப்பிடப்பட்டள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பிட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.	..... ஒப்பம்
மேற்பார்வையாளர் உறுதிப்படுத்துகிறேன்.	..... ஒப்பம்

A.R.M. AJEETH

www.lkedu.lk

1. **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

திருக்குறளானது தமிழில் வெளிவந்த உலகப்புகழ் பெற்ற அறநூல் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் 1330 குறள்கள் உள்ளன. ஒவ்வொரு குறளும் இரண்டு வரிகளில் அமைந்துள்ளது. இவை பத்துப் பத்து குறள்களாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் அறம், பொருள், இன்பம் எனும் முப்பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் திருக்குறளானது முப்பால் எனவும் அழைக்கப்படுகிறது.

(i) தர்மம் என்பதன் ஒத்த சொல்லைத் தருக? :.....

(ii) உலகப் புகழ் பெற்ற நூல் எது? :.....

(iii) நூலில் உள்ள முப்பெரும் பிரிவுகளைத் தருக? :.....

(iv) ஒரு அதிகாரத்தில் எத்தனை குறள்கள் உள்ளன? :.....

(v) இப்பந்தியில் இடம்பெறும் அடுக்குத் தொடரைத் தருக? :.....

(vi) உயர்திணை ஒருமைப்பெயர்ச் சொல்லைத் தருக? :.....

2. உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை பெயர்ச்சொல்லைத் தெரிவு செய்க.

பெண்கள், சிறுமிகள், மாணவி, ஆசிரியைகள், சகோதரிகள்

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

விளங்குகின்றன / உயர்ந்து / உலகில் / நாடுகள் / உழைப்பைப் / போற்றும்

.....

4. கீழே தரப்பட்டுள்ள தகவலை நன்கு வாசித்து அக்கூற்றுக்கு அமைய கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் அடையாளமிடுக.

குமாரின் வகுப்பிலுள்ள அனைவரும் நடனம் ஆடுவார்கள் அவர்களுள் ரேவதியும் நன்றாக ஆடுவாள்.

(i) ரேவதி நன்றாக பாட்டுப் பாடுவாள். ( )

(ii) குமாரின் வகுப்பில் ரேவதியும் கல்வி கற்கிறாள். ( )

(iii) குமாரும் ரேவதியும் நடனமாடும் திறமையுள்ளவர்கள். ( )

(iv) ரேவதியின் வகுப்பிலுள்ள அனைவரும் பெண்கள் ஆவர். ( )

5. பெருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) ஆசிரியர் என்னை அன்பாக அழைத்தார்

(ii) மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது பழமொழியாகும்

6. பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.

(i) திருப்பதியற்ற மனம்.

:.....

(ii) மனம் விரும்பினால் யாருக்கும் உதவலாம்.

:.....

7. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) நாங்க தேத்தண்ணி குடிச்சோம்.

:.....

(ii) ஊன்ரை பேர் என்ன?

:.....

www.lkedu.lk

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிழவியை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) எனது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி _____ என மின்னியது. (பளபள,கணீர்கணீர், மள மள)

(ii) கல்லில் மோதிய எனது கால் _____ (விறுவிறு, வின் வின், கமகம) என வலித்தது.

9. பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக.

காட்டிலுள்ள வரிக்குதிரை வேகமாக பாய்ந்து ஓடியது.

: _____

10. கீழே தரப்பட்டுள்ள சுருக்கக்குறியீட்டை விரித்தெழுதுக.

த . பெ . இ : _____

11. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய கருத்தை தமிழில் எழுதுக.

(i) Waterfall : _____ (ii) football : _____

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை ஆங்கில எழுத்துக்க எழுதுக. 2

(i)



_____

(ii)



_____

13. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(i) This / bus / is / a : _____

(ii) Are / they / drawing / a / dall : _____

14. "கும்பியா" எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

: _____

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தால் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

அப்பி வத்துற பொழு : _____

16. "பத்தொன்பதாயிரத்து தொண்ணூற்று ஒன்பது" எனும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் தருக.

: _____

17.

9		7
	0	
5		2

(i) கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய ஐந்திலக்க எண் யாது?

: _____

(ii) கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய ஐந்திலக்க எண் யாது?

: _____

A.R.M AJEETH

www.lkedu.lk

18. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் யாது?

25409, 26305, 23615, 24728, 22570 :.....

19. பெரியவர் ஒருவருக்கு சட்டை தைப்பதற்கு 2m 75cm துணியும் சிறியவர் ஒருவருக்கு சட்டை தைப்பதற்கு 1m 60cm துணியும் தேவையாகும். 03 பெரியவருக்கும் 05 சிறியவருகும் சட்டை தைப்பதற்கு தேவையான துணியின் அளவினை மீற்றர் சென்றிமீற்றரில் தருக.

:.....

20. ஐந்து நாடுகளில் கொரோனா நோய் தொற்றுக்குள்ளானவர்களின் தகவல்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

நாடுகள்	நோயாளிகளின் எண்ணிக்கை
சீனா	17985
இத்தாலி	19758
அமெரிக்கா	18656
ஸ்பெயின்	17532
ஜேர்மன்	16792

(i) இத்தாலி, ஜேர்மன் ஆகிய இரண்ட நாடுகளிலும் கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர் -களின் எண்ணிக்கை யாது?

:.....

(ii) அமெரிக்கா, ஜேர்மன் ஆகிய இரு நாடுகளிலும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் யாது?

:.....

21. ஒரு பழக்கூடையில் 72 பழங்கள் உள்ளன. அதில் $\frac{5}{9}$ பங்கு அப்பில் பழங்களும் $\frac{4}{9}$ பங் தோடம்பழங்களாகும்.

(I) கூடையில் உள்ள அப்பிள் பழங்களின் எண்ணிக்கை யாது? :.....

(II) கூடையில் உள்ள தோடம் பழங்களின் எண்ணிக்கை யாது? :.....

22. முற்பகல் 11.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட தர்சிகா 1 மணித்தியாலம் 30 நிமிடங்களில் நூலகத்திற்குச் சென்றாள். அவள் நூலகத்திலிருந்து புத்தகங்களை வாசித்து பிற்பகல் 4.30 இற்கு நூலகத்தை விட்டு வெளியேறினாள். எனின்

(i) தர்சிகா நூலகத்திற்கு சென்றடைந்த நேரம் யாது? :.....

(ii) தர்சிகா நூலகத்திலிருந்து புத்தகம் வாசித்த நேரத்தை மணித்தியாலத்திலும் நிமிடத்திலும் தருக.

:.....மணித்தியாலம்.....நிமிடம்

23. ஒரு பீப்பாயில் 15l 650ml பால் இருந்தது. அதிலிருந்து 5l 750ml பால் குமாருக்கு விற்பனை செய்யப்பட்டு எஞ்சியிருந்த பாலை கமல், விமல், மாலா, பாத்திமா, உமா, ஆகிய ஐந்து மாணவர்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

(i) குமாருக்கு விற்பனை செய்த பின் பீப்பாயில் எஞ்சியிந்த பாலின் அளவு யாது? :.....

(ii) மாலாவுக்கு வழங்கப்பட்ட பாலின் அளவு யாது? :.....

24. ரூபாய் 49.00 விலையுள்ள இரு பயிற்சி புத்தகங்களையும் ரூபாய் 18.50 விலையுள்ள மூன்று பேனைகளையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபாய் 100.00 உள்ளது. எனது கொள்வனவுக்கு மேலும் தேவைப்படும் பணம் எவ்வளவு?

:.....

A.R.M. AJEETH

www.lkedu.lk

25. 6kg 750g சீனியிலிருந்து 2kg 500g சீனி எடுக்கப்பட்ட பின் எஞ்சிய சீனியை 250g பைக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்டது. அவ்வாறு பொதி செய்யப்பட்ட பைக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது?

:.....


26. சரவணன் தனது வீட்டிலிருந்து 750m தூரம் வடக்கு நோக்கிச்சென்று இடதுகைப்பக்கம் திரும்பி 500m தூரம் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி 750m தூரம் சென்று பாடசாலையை அடைந்தான்.

(i) பாடசாலைக்கு எத்திசையில் சரவணனின் வீடு அமைந்துள்ளது? :.....

(ii) பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர் ஆகும்?

:.....


27.



1. உருவில் நிழற்றிய பகுதியை பின்னமாக தருக. :.....

2. நிழற்றப்படாத பகுதியை தசமமாக தருக. :.....

28.




(i) இவ்வுருவினுள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

:.....

(ii) இவ் உருவினை பிரிக்கும் இரண்டு சமச்சீர் கோடுகளை வரைக.

29. ஓர் ஆரம்ப பாடசாலையில் தரம் - 5 பிள்ளைகள் பாடசாலைக்கு வரும் வாகனங்கள் பற்றிய் தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) பஸ்சிலும் முச்சக்கர வண்டியிலும் வரும் மாணவர்களின் எண்ணிக்ககைக்கிடையிலான வித்தியாசம் யாது?

:.....

(ii) தரம் 5 இல் கல்வி கற்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 72 எனின் சைக்கிளில் வரும் மாணவர்க -ின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

❖ **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

30. "கண்களை மெல்ல மெல்ல மூடுதல்" இச்செயற்பாடு இடம்பெறுவது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் எத்தனையாவது படிமுறையில்?

1) முதலாவது 2) இரண்டாவது 3) மூன்றாவது

M. AJEETH

www.lkedu.lk

31. இளஞ்சிவப்பு நிறத்தளிர்களையும் வெள்ளை நிறப்பூக்களையும் உருவாக்கும் தாவரம்
1) எலுமிச்சை 2) நாவல் 3) நாகம்

32. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழங்களையுடைய விடையைத் தெரிவு செய்க.
1) நெல்லி, மரமுந்திரி, ரம்புட்டான் 2) விளாம்பழம், மரமுந்திரி, ரம்புட்டான்
3) மங்குஸ்தான், மரமுந்திரி, மாதுளை

33. ஒரு குறித்த காலத்தில் மாத்திரமின்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?
1) இறப்பர், வாழை, அலரி 2) வெண்டி, தென்னை, வாழை
3) ரம்புட்டான், கொய்யா, வாழை

34. தாவர இலைகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் விலங்குகள்
1) மயிர்கொட்டி, மான், ஆந்தை 2) ஆடு, மான், செண்பகம்
3) நத்தை, மயிர்கொட்டி, மான்

35. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டிப் பரம்பலடையும் வித்துக்கள்
1) எண்ணை, எருக்கலை, புலிநகம் 2) எருக்கலை, துத்திரி, எண்ணை
3) துத்திரி, புலிநகம், நாயுருவி

36. எமது நாடு இலங்கையின் தேசிய குறியீடுகளாக அமைபவை
1) தேசிய இலட்சினை, தேசிய கீதம் 3) தேசிய இலட்சினை, தேசிய கொடி
2) தேசிய கொடி, தேசிய கீதம்

37. எமது நாட்டின் அரச இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளவை
1) இலவசப் பாடநூல்கள், கடவுச்சீட்டு, பரீட்சைத்தாள்
2) இலவசப் பாடநூல்கள், கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை
3) தேசிய கொடி, கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை

38. தேசிய இலட்சினையிலுள்ள தர்மச்சக்கரம், நிறைகுடம், நெற்கதிர்கள் என்பன குறித்து நிற்பவை முறையே
1) தார்மீகம், தூய்மை, தன்னிறைவும் செழிப்பும்
2) தார்மீகம், நிலைத்திருத்தல், தன்னிறைவும் செழிப்பும்
3) தார்மீகம், சௌபாக்கியம், தன்னிறைவும் செழிப்பும்

39. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப்பிரசித்தி பெற்ற இடங்கள்
1) ருவன்வெலிசாய, தூபராம 2) சிவனொலிபாதம், கோணேஸ்வரம்
3) காலிக்கோட்டை, சிகிரியா

40. இந்தியா, இலங்கை, மாலைத்தீவு முதலிய நாடுகள் அமைந்துள்ள கண்டம்
1) ஆசியாக்கண்டம் 2) ஆபிரிக்கக்கண்டம் 3) ஆசியாக்கண்டம்

41. "நீர்ப்பிசாசு" அமைப்பு யாருக்கு பயன்படும்
1) நீச்சல் வீரர்களுக்கு 2) சுழியோடிகளுக்கு 3) விவசாயிகளுக்கு

42. பற்சில்லுகளை கொண்ட உபகரணங்கள்
1) துவிச்சக்கர வண்டி, கடிகாரம், விளையாட்டுக்கார்
2) ஒற்றைச்சில்லு வண்டி, தேங்காய் துருவி, துவிச்சக்கர வண்டி
3) தேங்காய் துருவி, மின் விசிறி, கடிகாரம்

A.R.M. AJEETH

www.lkedu.lk

43. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்கள் மாத்திரம் கொண்டவை
1) தொலைபேசி, பேனை, பற்தூரிகை 2) சீப்பு, குடை, பேனை
3) ஆடை, பற்தூரிகை, கைக்குட்டை

44. காசோலையை மாற்றுதல், திருமணப்பதிவு வழங்குதல், காசுக்கட்டளைகளை மாற்றுதல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் முறையே
1) வங்கி, தபால் நிலையம், பிரதேச செயலகம்
2) தபால் நிலையம், வங்கி, பிரதேச செயலகம்
3) வங்கி, பிரதேச செயலகம், தபால் நிலையம்

45. பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்குகள் அல்லாத விடையை தெரிவு செய்க.
1) தாவரப்பகுதிகளை உண்ணுதல். 2) கிளைகளை முறித்தல்.
3) மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்.

46. சிறிய தீக்காயங்கள் ஏற்படும் போது காயங்களுக்கு மருந்தாக பயன்படும் தாவரம்
1) வேப்பிலை 2) துளசி 3) கற்றாளை

47. கால்கள் அற்ற பிராணிகளைக் கொண்ட கூட்டத்தை தெரிவு செய்க
1) அட்டை, மண்புழு, பூரான் 2) அட்டை, மண்புழு, நத்தை
3) அட்டை, மண்புழு, உண்ணி

48. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை
1) உப்புக்கரைசலில் அமிழ்த்தி வைத்தல். 2) அவித்தல்
3) தேனில் அமிழ்த்தி வைத்தல்.

49. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்கு காரணமாக அமையும் பிராணிகள்
1) எலி, நுளம்பு 2) நாய், ஈ 3) நுளம்பு, நாய்

50. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகுக்கு சிறந்த சேவையாற்றிவர்
1) சேர் ஆதர் சி. கிளாக் 2) சேர் டீ.பீ ஜயதிலக்க 3) கலாநிதி ரீ.பீ ஜாயா

51. இலங்கையில் முதல் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப்பெற்றுக் கொடுத்தவர் யார்?
1) சுசந்திக்க ஜெயசிங்க 2) டங்கன் வைட் 3) சிந்தன விதானகே

52.  படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் முறை யாது?
1) சங்கிலித்தையல் 2) கம்பளித்தையல் 3) சோம் தையல்

53. இறைச்சி, பருப்பு, சோயா, கடலை, கருவாடு போன்ற உணவினை உண்ணுவதினால் உடலுக்கு கிடைக்கக்கூடிய போசணைக்கூறு.
1) மாப்பொருள் 2) புரதம் 3) கொழுப்பு

54. பின்வருவனவற்றுள் குழு விளையாட்டில் இருக்கக்கூடாத இயல்பாக அமைவது
1) தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல். 2) தமக்கு விரும்பியவாறு செயற்படுதல்.
3) தம் பணியை பொறுப்புடன் நிறைவேற்றல்.

55. ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்களின் நிறத்தைக் கொண்ட கூட்டத்தை தெரிவு செய்க.
1) கறுப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் 2) கறுப்பு, சிவப்பு, ஊதா, மஞ்சள், நீலம்
3) கறுப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள்

A.R.M.AJEETH


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

56. நபர் ஒருவருக்கு வானவில் தென்படக்கூடிய சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?
    1) மின்னலுடன் பெருமழை பெய்யும் போது
    2) பெருமழையுடன் காற்று வீசும் போது
    3) சூரிய ஒளியுடன் சிறு மழை பெய்யும் போது

57. பாடசாலைத் தோட்டத்தில் மிளகாய்ச் செடி நடுவதற்கு தெரிவு செய்யப்படவேண்டிய இடம் தொடர்பான சரியான கூற்று
    1) சூரிய ஒளி குறைவாக கிடைக்கின்ற, பெரிய மரங்களுள்ள, கற்கள் கொண்ட தரையில்.
    2) கற்களைக் கொண்ட கரடுமுரடான நீர் வழிந்தோடும் தரை
    3) சூரிய ஒளி நன்கு கிடைக்கின்ற நீர் வழிந்தோடும் கற்களற்ற சம தரையாகும்.

58. தீப்பற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபரொருவருக்கு முதலுதவியை பெற்றுக் கொடுக்கையில் எம்மால் முதலில் செய்ய வேண்டியது எது?
    1) எரிந்த பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்.
    2) எரிந்த பகுதியின் மீது எண்ணெய் வகையொன்றைப்பூசுதல்.
    3) சுத்தமான குளிர் நீரால் எரிந்த பகுதியை குளிர்மையாக்கல்.

59. மண்ணரிப்பினைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாக அமையாதது.
    1) மண்ணின் வளம் குறைவடையும்
    2) மரங்களை நாட்டுதல்
    3) அணைக்கட்டுக்களைக் கட்டுதல்.

60. உலகில் பரவிய கொரோனாத் தொற்றுக் காரணமாக பாடசாலை அனைத்தும் சுமார் நான்கு மாத காலங்கள் மூடப்பட்டிருந்தன. இவ் விடுமுறைக் காலத்தை பயனுள்ள வகையில் கற்றல் பணிகளில் சிறப்பாக ஈடுபடுமாறு ஆசிரியர் கூறியது எனும்தனில் பதிந்துள்ளது. "**பாடசாலை விடுமுறைக்காலத்தை நான் கழித்த விதம்**" எனும் தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

1) .....
.....
2) .....
.....
3) .....
.....

A.R.M. AJEETH

...අවසානයි...